# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.12/2020

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 3ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு டிசம்பர் மாதம் 16 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கஜேந்திரன் | மதம் | : இந்து |
| த/பெ | : கோவிந்தன் | ஜாதி | : -- |
| வயது | : 54 | கிராமம் | : பூச்சிரெட்டிபள்ளி |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**16.12.2024**

**வா.சா. 3 திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை**

1. எனக்கு இந்நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. வாதி அழைத்துதான் நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் அதே ஊரை சேர்ந்தவர் என்றால் ஆமாம். நான் வழக்கு சொத்து உள்ள தெருவில் வசிக்கிறேனா என்றால் இல்லை. பக்கத்தில் உள்ள மேட்டு கொல்லை தெருவில் வசிக்கிறேன். வழக்கு சொத்தின் புல எண் தெரியுமா என்றால் புல எண்.125/47 பி ஆகும். பிரதிவாதிகள் ராதா, வெங்கடேசனை தெரியுமா என்றால் தெரியும். வெங்கடேசனின் பூர்வீகம் புஜ்ஜிரெட்டிபள்ளிதான் என்றால் சரிதான். அவர்கள் தோப்பு தெருவில்தான் வசிக்கிறார்கள் என்றால் இல்லை. தோப்பு தெருவிற்கு தற்போதுதான் வந்தார்கள். புது தெருவில் தான் இருந்தார்கள். தோப்பு தெருவிற்கு வந்து எத்தனை வருடம் இருக்கும் என்றால் 20 வருடம் இருக்கும்.

2. அண்ணியப்ப முதலியார், செல்லக்குட்டி முதலியார், ஏகாம்பர முதலியார் ஆகியோரை தெரியுமா என்றால் தெரியாது. வாதி துளசி வழக்கு சொத்தை வாங்கும்போது நான் உடன் இருந்தேனா என்றால் உடன் இருந்தேன். பத்திரம் பதிவின் போது நான் உடன் இருந்தேனா என்றால் உடன்

இருந்தேன். நான் அந்த கிரைய ஆவணத்தில் சாட்சி கையெழுத்து எதுவும் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஜெயராம முதலியார், பிள்ளையார் முதலியார் எந்த தெருவை சேர்ந்தவர்கள் என்றால் ஜெயராம முதலியார் புது தெருவை சேர்ந்தவர். பிள்ளையார் முதலியார் மேட்டு தெருவை சேர்ந்தவர்.

3. ஜெயராம முதலியார், பிள்ளையார் முதலியார் ஆகியோருகிடையே மத்தியஸ்தம் நடந்த போது நான் உடன் இருந்தேனா என்றால் இல்லை. அங்கு என்ன பேசிக்கொண்டார்கள் என்பதும் அங்கு என்ன நடந்தது என்பதும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் வாதிக்கு பவ்வியப்பட்டு வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. புல எண்.125/47 பி எங்கு உள்ளது என்றால் தோப்பு தெருவில் உள்ளது. வாதியின் பட்டாவிற்கும் வா.சா.ஆ 1 கிரையத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

4. நான் ஒரு தெரு தள்ளியிருப்பதால் வழக்கு சொத்தில் என்ன நடக்கிறது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். வா.சா.ஆ 1 ஆவணத்திலேயே வெங்கடேசனின் பாட்டி சொத்தின் புல எண்ணை காட்டிதான் பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளதால் அந்த பத்திரமே தவறானது என்றால் சரியல்ல. பத்திரப்பதிவுக்கு நான் சென்றிருந்தேன். வழக்கு சொத்தின் நான்கு எல்லைகள் சொல்ல முடியுமா என்றால் ரோசம்மாள் வீட்டிற்கு கிழக்கே வெங்கடேசன் வீட்டிற்கு மேற்கே, வடக்கே சங்கர் செட்டி மனை, தெற்கே கிழமேல் தெரு உள்ளது.

5. நான் சொல்லும் நான்குமால் தவறு என்றாலும் பத்திரப்பதிவுக்கு நான் சென்றதாக சொல்வது தவறு என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வெங்கடேசன் நிரந்தரமாக தோப்பு தெருவில்தான் வசிக்கிறார் என்றால் இல்லை. பிரதிவாதிகள் அவர்களது தாத்தா பாட்டி காலத்தில் இருந்தே அனுபவித்து வருகிறார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. வெங்கடேசன் புது தெருவில் இருந்து வந்து இங்கு வீடு கட்டியது மட்டும்தான் எனக்கு தெரியும். 1ம் பிரதிவாதியின் பாட்டி உன்னாமலையம்மாள் 1963 லேயே ஏகாம்பர முதலியிடம் கிரையம் பெற்று அவர் அனுபவித்து வந்து

தற்போது வெங்கடேசன் அனுபவித்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது.

6. குப்பையா செட்டி பெயரில் பட்டா உள்ளது தெரியுமா என்றால் தெரியும். தவறுதலாக வெங்கடேசன் பெயரில் பதிவு ஏற்பட்டுள்ளது என்றாலும் அந்த பதிவே செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் வாதிக்கு பவ்வியப்பட்டு வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)